


34ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 34 | பாலம்: 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2024

# விளாடிமிர் புடின் உடன் நேர்காணல்

"நேற்றோ (NATO) கிழக்கு நோக்கி விரிவடையாது, என்று அமெரிக்கா ரஷ்யாவிற்கு உறுதி அளித்தது. கிழக்கு நோக்கி ஓர் அங்குலம் கூட நகர மாட்டோம் என்றனர். ஆனால், பிறகு என்ன நடந்தது? இந்த உறுதி காகிதத்தில் பதியப்படவில்லை, எனவே நாங்கள் நேற்றோவை விரிவுப்படுத்துவோம் என்றனர்" என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் (Vladmir Putin) அமெரிக்காவின் ரக்கர் கார்ல்சன் வலையமைப்பைச் சேர்ந்த (The Tucker Carlson Network) ஊடகவியலாளர் ரக்கர் கார்ல்சனுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார்.



Tucker Carlson interviewing Vladimir Putin — Thanks: Tucker Carlson

இந்த ரஷ்ய அதிபருடனான ரக்கர் கார்ல்சனுடைய நேர்காணல் முழுவதும் 2024 பெப்பிரவரி 8ஆம் திகதி ரக்கர் கார்ல்சன் வலையமைப்பில் வெளியிடப் பட்டது. இந்நேர்காணல் இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் நடைபெற்றது.

ரக்கர் கார்ல்சன் அமெரிக்காவின் பழமைவாதக் கொள்கையுடைய ஓர் ஊடகவியலாளர். 54 வயதான ரக்கர் கார்ல்சன் Fox News தொலைக்காட்சியில், "ரக்கர் கார்ல்சன் இன்றிரவு" என்னும் ஓர் அரசியல் பேச்சு நிகழ்வை (Talk Show) எட்டு வருடங்களாகத் தொடர்ந்து நடத்தி வந்தவர். இவர் அமெரிக்க பழமைவாத அரசியல் விமர்சகரும் எழுத்தாளருமாவார். ரக்கர் கார்ல்சன் Fox Newsஇல் சேருவதற்கு முன்னர் CNN தொலைக்காட்சியிலும் நிகழ்வுகளை நடத்தி வந்தவர். இவர் தற்போது தனது சொந்த நிறுவனமான ரக்கர் கார்ல்சன் வலையமைப்பை நடத்துவதுடன் X சமூகவலைத்தளத்திலும் தனது ஒளிப்பதிவுகளை வெளியிட்டு வருகிறார். இவர் அண்மையில் மொஸ்கோ, ரஷ்யாவிற்குச் சென்று ரஷ்ய அதிபரை இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நேர்காணல் செய்து அதை சமூகவலைத்தளம் Xஇலும் தனது சொந்த இணையதள அமைப்பான ரக்கர் கார்ல்சன் வலையமைப்பிலும் வெளியிட்டார். இதுவே ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் 2022 பெப்பிரவரியில் உக்ரைனுடன் போர் ஆரம்பித்த பின்னர் மேற்குலக ஊடகவியலாளர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக வழங்கிய நேர்காணல் ஆகும். இந்நேர்காணலுக்கு முன்னர் ரக்கர் கார்ல்சன், "உக்ரைனின் அதிபர் வொலோடிமிர் ஜெலன்ஸ்கிக்கு (Volodymyr Zelenskyy) மேற்குலக ஊடகங்கள் மேடை அமைத்துக் கொடுத்தன. ஆனால், எந்த ஒரு மேற்குலக ஊடகவியலாளரும் இந்த மோதலில் ஈடுபட்டுள்ள மற்றொரு நாட்டின் அதிபரான விளாடிமிர் புடினை நேர்காணல் செய்ய முயலவில்லை" எனக் குறிப் பிட்டிருந்தார். அதற்குப் பல அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகவியலாளர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அவர்கள் தங்களது நேர்காணலுக்கான அழைப்பை ரஷ்ய அதிபரது அலுவலகம் நிராகரித்து இருந்தது எனத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டி ருந்த கிரெம்ளின் ஊடகச் செயலாளரான (Kremlin Press Secretary) டிமிட்ரி பெஸ்கோவ் (Dmitry Peskov), "ரக்கர் கார்ல்சனுடைய நிலைப்பாடு வேறுபட்டது. அவர் ஒரு ரஷ்யா சார்பானவரோ அல்லது உக்ரைன் சார்பானவரோ அல்ல. அவர் ஓர் அமெரிக்க சார்பு ஊடகவியலாளர். அதனால்தான் அவருக்கு விளாடிமிர் புடினை நேர்காணல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது" என்றார்.

இந்த இரண்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நீண்ட உரையாடலில் விளாடிமிர் புடின் ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையிலான உறவு பற்றியும், இவ்விரு நாடுகளின் ஆரம்பம் முதல் தற்போது வரை நடைபெற்ற வரலாறுகளையும், ரக்கர் கார்ல்சனுக்கு விளக்கினார். ரஷ்ய அரசு ஒன்பதாம் நூற்றாண்டில் (CE 862) தோற்றுவிக்கப்பட்டது பற்றியும், ஹிட்லருடன் போலந்து ஒத்துழைப்பு வழங்கியது பற்றியும் மற்றும் உக்ரைன் எவ்வாறு செயற்கையாக 20ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது பற்றியும் கூறினார். ஒரு கட்டத்தில் ரக்கர் கார்ல்சன் என்சைக்ளோபீடியா (அகராதி) மாதிரி இந்தப் பிரதேசம் பற்றிய அறிவை விளாடிமிர் புடின் கொண்டிருப்பதாக அவரைப் பாராட்டினார்.

விளாடிமிர் புடின் கூறுகையில், "17ஆம் நூற்றாண்டில் போலந்து தற்போதைய உக்ரைனின் சில பகுதிகளை ஆட்சி செய்ய வந்தபோது அந்தப் பகுதி மக்கள் சரியாக ரஷ்யர்கள் போல் இல்லை. அவர்கள் விளிம்பில் (எல்லையில்) வாழ்வதால் அவர்களை உக்ரைனியர்கள் என அழைத்தனர். முதலில் உக்ரைனியன் என்ற வார்த்தையின் பொருள், அந்த


தொடர்ச்சி 05 பக்கம்
















BUILD YOUR
ESTATE STYLE
CUSTOM HOUSE
READY TO BUILD
LAND
FOR SALE
IN THE DURHAM & GTA
Full Home Designs — Fully Insured, Customer Focused, Outstanding Design Team Here To Support Your Dream Home.
Only
$699K


HOUSE
FOR RENT
Warden &
401/Sheppard
Bright living & dining room with walkout to south facing patio & fenced yard. Nice hardwood floors, eat-in kitchen with stainless steel appliances. Spacious bedrooms. Partially finished basement with new broadloom, fresh paint, cozy wood burning fireplace & extra bath with separate shower. Plenty of space to make room for the extended family.
PROPERTY FEATURES
• Living Room • 2 Bathroom
• Dining Room • Smoke and pet free home
• 3 Bedroom • Bungalow House
APARTMENT
FOR RENT
Enjoy Brand New Never Lived In Immaculate 2 Bedroom, 2 Bathroom Suite In Luxury Condo In Prime Scarborough Location. Excellent Location, Minutes To TTC, Highway 401, Go Train
FACILITIES
MORE INFORMATION
647- 296- 0596
www.ParaCity.ca
KENNEDY
& 401


HOME FOR SALE
PRIDE OF OWNERSHIP!
Custom Home over 5000 sq ft
RICHMOND HILL
TORONTO
TORONTO
OSHAWA
OFFICE USE
You're in the right place for real estate!
Book Now
647-296-0596
www.ParaCity.ca


FOR SALE
New Brunswick
CUSTOM HOME
ONLY
1.4M
6500 SQ.FT
HOUSE
For Your Beloved Family


Get in Touch
Para Tisikulasingam
Real Estate Agent
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Raja Mahendran
Broker/Owner
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(647) 296-0596
HOMELIFE/GTA REALTY INC., BROKERAGE*
independently owned & operated
5215 Finch Ave E #203, Scarborough, ON M1S 0C2
O : 416.21.6969 | F: 416.321.6963
(416) 321-6969


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# ஹரிகரனின் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பத்திற்கு யார் காரணம்?




யாழ்ப்பாணம் முற்றவெளியில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற தென்னிந்திய பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பம் பல தரப்பினரிடமும் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. இது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் பெரியளவில் இடம்பிடித்திருந்தது. இந்தக் குழப்பம் யாழ்ப்பாண சமூகம் தொடர்பில் தவறானதொரு பார்வையை ஏற்படுத்தியுள்ளதாகவும் சிலர் கூறுகின்றனர்.



இந்தக் குழப்பத்திற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் முறையான ஒழுங்குபடுத்தல் இல்லாமையே காரணம் என்பதை கூறியே ஆகவேண்டும். நிகழ்ச்சி தடைப்படவில்லை. சுமார் 20 நிமிடங்கள் தடை ஏற்பட்ட போதும் பின்னர் நிகழ்ச்சி முழுமையாக நடைபெற்று நிறைவடைந்ததாக பாடகர் ஹரிகரன் உள்ளிட்ட கலைஞர்கள் தமிழகம் திரும்பும்போது ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு ரசிகர் கூட்டத்தை தமிழகத்தில் கூட பார்க்க முடியாது என அவர்கள் குறிப்பிட்டதோடு யாழ்ப்பாண மக்களுக்கு தங்கள் நன்றியினைத் தெரிவிப்பதாகவும் கூறிச் சென்றனர்.

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
www.tamilvanakkam.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

இது தொடர்பில் ஒருவர் முகநூலில் 'ஒப்பரேசன் சக்சஸ் - ஆள் குளோஸ்' என்று பதிவிட்டிருந்ததை இங்கு குறிப்பிட வேண்டும். உண்மையில் கலைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளை முழுமையாக அவர்கள் மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

பாடகர் ஹரிகரனின் இசை நிகழ்விற்கு மேலதிகமாக நடனம், நகைச்சுவை போன்ற பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதற்கென திரைப்பட மற்றும் சின்னத்திரை கலைஞர்களும் குழுவில் வந்திருந்தனர். நடைபெறவிருந்த நிகழ்வுகள் தொடர்பில் முன்பாகவே ஊடகங்களிடம் கலைஞர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், அந்த நிகழ்வுகள் முழுமையாக நடைபெற முடியாமல் போய்விட்டது.

இந்த நிகழ்ச்சி கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக நடைபெறும் என்பதாகவே முதலில் சொல்லப்பட்டது. பின்னர், 25,000 ரூபாய், 7,000 ரூபாய், 3,000 ரூபாய் என அனுமதிச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டு, இவ்வாறு அனுமதிச் சீட்டு பெற்றவர்கள் மட்டுமே ஆசனங்களில் அமர்ந்து நிகழ்வை பார்க்கலாம் ஏனையோர் பின்னால் நின்று இலவசமாகப் பார்க்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான சரியான அறிவித்தலை முன்னதாகவே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சரியான முறையில் வெளிப்படுத்தவில்லை எனக் கூறப்படுகின்றது.



கட்டணத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் ஒரு தொகை இளைஞர் கூட்டம் மக்களைத் தள்ளிக்கொண்டு புகுந்து அமரத் தொடங்கியதும் குழப்பநிலை ஆரம்பமானது. பணத்தைச் செலுத்தியோர் ஆசனங்களின்றி நின்றனர். அவர்களில் பலர் சிறு பிள்ளைகளுடன் குடும்பமாக இசை நிகழ்ச்சியை பார்க்க வந்தவர்கள்.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆபத்தான இடங்களில் எல்லாம் ஏறி நின்றனர். தடுப்புகளை உடைத்து உள்ளே சென்று குழப்பத்தை ஏற்படுத்தியோரில் பலர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபடும் காவாலிக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறானதொரு நிகழ்வை ஒழுங்குபடுத்தியோர் முறையானதொரு பொலிஸ் பாதுகாப்பை பயன்படுத்தியிருக்க வேண்டும். பொலிஸார் நுழைவாயிலில் இருந்து கண்காணிப்பில் ஈடுபடுவதற்கான ஒழுங்கைச் செய்திருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை. குழப்பம் ஏற்பட்ட பின்னர் மேலதிக பொலிஸாரும், அதிரடிப்படையினரும் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த குழப்பங்களின்போது சிலர் மயக்கமுற்றனர். சிலர் காயமடைந்தனர். குழப்பத்திற்கு காரணமான சிலர் கைது செய்யப்பட்டனர். கதிரைகள், தண்ணீர்த் தாங்கி உள்ளிட்ட பல பொருட்கள் உடைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு ஹரிகரனின் இசை நிகழ்ச்சி நடந்து முடிந்தது.





இவ்வாறானதொரு களியாட்ட நிகழ்வு யாழ்ப்பாணத்திற்குத் தேவையா? என்கின்ற கேள்வியை சிலர் எழுப்புகின்றனர். அனைவரும் இரசிக்கும் குரல்வளம்மிக்க பாடகர் ஹரிகரன். அவரது இசைக்கு மேலதிகமாக களியாட்டம் என்று குறிப்பிடக்கூடிய நிகழ்வுகளும் ஏற்பாடாகியிருந்தன. எனினும், எதிர்பார்த்திராத அளவு மக்கள் முற்றவெளியை ஆக்கிரமித்திருந்தமையானது மக்களுக்கு இவ்வாறானதொரு வடிகால் தேவை என்பதையே உணர்த்துகின்றது. இதனை தவறு என்று சொல்ல முடியாது.

நடந்த குழப்பங்கள் யாழ்ப்பாண சமூகம் மீது தமிழகத்தினர் கொண்டிருந்த நன்மதிப்பைக் கெடுத்து விட்டது என்றும் சிலர் கவலைப்படுகின்றனர்.

வடக்கில் பெரும் முதலீட்டை ஏற்படுத்தும் நோக்கில் தொழிலதிபர் இந்திரன் பத்மநாதனால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இசை நிகழ்ச்சியின் ஏற்பாடுகள் மூன்றாம் தரப்பிற்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், அத்தரப்பினர் ஏற்பாடுகளை முறையாக கையாளாமல் விட்டதே அங்கு ஏற்பட்ட குழப்ப நிலைக்குக் காரணம் என அரசியல் மற்றும் சமூக தரப்புகளில் இருந்து அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

நடந்த குழப்பங்களை வைத்து ஊடகங்கள் யாழ்ப்பாண மக்களைப் பற்றிய தவறான அபிப்பிராயங்களைக் கட்டமைக்கக் கூடாது என்றும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் பெருமளவில் ஒன்றுகூடும், இந்திர விழா, வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா, ஆலய விழாக்கள் உள்ளிட்டவற்றில் மிக கண்ணியத்தோடு மக்கள் நடந்து கொள்வதையும் இந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன.



# சர்வதேச...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மனிதன் மாநிலத்தின் புறநகர்ப் பகுதியான விளிம்புகளில் வாழ்வதாக அர்த்தம்" என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "தற்போதைய உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்கில் உள்ள பகுதிகளுக்கு உக்ரைனுடன் எந்த வரலாற்றுத் தொடர்பும் இல்லை. இவை 17ஆம் நூற்றாண்டில் ரஷ்ய பேரரசி கத்தரின் என்பவரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் ஆகும். அதாவது இந்தப் பிரதேசம் உண்மையில் ரஷ்யாவிற்கு உரிமையான இடம்" என்று கூறினார்.



Tucker Carlson Thanks: Wikipedia

விளாடிமிர் புடினின் இந்த நேர்காணல் குறித்து கருத்து வெளியிட்ட BBC ஊடகம், மிச்சிகன் பல்கலைக்கழகப் பேராசிரியரான றொனால்ட் சுனி (Ronlad Suny) என்பவர் விளாடிமிர் புடினுடைய இக்கதை ரஷ்யர்களால் தங்கள் வம்சாவளி றூறிக் (Rurik)வரை பழமை வாய்ந்தது எனக் கூறும் ஒரு புராணக்கதை (Mythology) என்றும், உக்ரைன் மீது அவர்களது ஏகாதிபத்தியப் பிடியை நியாயப்படுத்த இப்புராணக்கதை ரஷ்யர்களுக்கு வரலாறாக படிப்பிக்கப் படுகிறது என்றும் கூறியதாக செய்தி வெளியிட்டுள்ளது.

ரக்கர் கார்ல்சனின் நேர்காணலில் விளாடிமிர் புடின், "உக்ரைனுக்கும், ரஷ்யாவிற்கும் இடையே 2022ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஓர் உடன் படிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையில் சில திருத்தங்கள் செய்து தனது கையெழுத்தை உக்ரைனிய அதிபர் வெலோடிமிர் ஜெலென்ஸ்கி



Russian President Vladimir Putin Thanks: Aljazeera

இட்டிருந்தார். பின்னர் நாங்கள் இருவரும் உத்தியோகபூர்வமாக அந்த உடன்படிக் கையில் கையெழுத்திடத் திட்டமிட்டிருந் தோம். அவ்வாறு நடந்திருந்தால் இந்தப் போர் மூண்டிராது. ஆனால், அப்போதைய இங்கிலாந்தின் பிரதமர் போறிஸ் ஜோன்ஸன் (Boris Johnson) உக்ரைனுக்கு சென்று அவ்வாறு ஓர் உடன்படிக்கையில் ஜெலென்ஸ்கியை கையெழுத்து இடவேண்டாம் எனத் தடுத்தார். இதனாலேயே அவ்வாறான ஓர் உடன்படிக்கை அமல்படுத்தப்படாமல் போனது" என்றார்.

முன்னர் 'The Times' ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் போறிஸ் ஜோன்ஸன் இவ்வாறு ரஷ்யா செய்துவரும் பரப் புரையை வன்மையாகக் கண்டித்திருந்தார். தான் அவ்வாறு ஓர் உடன்படிக்கையில் ஜெலென்ஸ்கி கையொப்பமிடுவதைத் தடுக்கவில்லை என்றும், அவ்வாறு ஓர் உடன்படிக்கையில் உக்ரைன் கையொப்ப மிடுவதற்கு இங்கிலாந்தின் கரிசனையை மட்டுமே தெரிவித்ததாகவும், அத்துடன் உக்ரைனுக்கு எவ்விதத்திலும் இங்கிலாந்து உடந்தையாக இருக்கும் என்று கூறியதாகவும் தெரிவித்திருந்தார்.

உக்ரைனின் "Servant of the People" கட்சியின் தலைவரான David Arakhamiya உக்ரைனின் நாடாளு மன்றத்தில் உரையாற்றும்போது, "இங்கிலாந்தின் பிரதமர் போறிஸ் ஜோன்ஸன் உக்ரைன், ரஷ்யாவுடன் எந்த ஒரு சமாதான உடன்படிக்கையிலும் கையெழுத்து இடக் கூடாது, போரைத் தொடர வேண்டும்" என்று



Boris Johnson Thanks: Independent

கூறியிருந்ததைத் தொடர்ந்தே போறிஸ் ஜோன்ஸன் உக்ரைனை எந்த உடன் படிக்கையிலும் கையெழுத்திட வேண்டாம் எனத் தான் தடுக்கவில்லை என 'The Times' நாளிதழில் கூறியிருந்தார்.

இவ்வாறு போறிஸ் ஜோன்ஸன் ரஷ்யா விற்கும், உக்ரைனுக்கும் இடையேயான ஒரு சமாதான உடன்படிக்கை உருவாகுவதை தவிர்க்குமாறு கூறியதாக அமெரிக்காவைச் சேர்ந்த Robert F Kennedy Jr. உம் சமூகவலைதளமான டுவிட்டர் / X இல் கூறியிருந்தார்.

அவர் அந்தப் பதிவில், "2022இல் ரஷ்யாவிற்கும், உக்ரைனுக்கும் இடையே ஒரு தற்காலிக சமாதான உடன்படிக் கையை முறியடிக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகம் போறிஸ் ஜோன்சனை உக்ரைனுக்கு அனுப்பியது போல் தெரிகிறது. அமெரிக்காவின் கரிசனை உக்ரைன் மக்களைப் பற்றியது அல்ல. அது எப்போதும் ரஷ்யாவிற்கு எதிரான போர் பற்றியதே" என்று குறிப்பிட்டிருந்தார்.

விளாடிமிர் புடின் இந்த உத்தியோக பூர்வமாக கையெழுத்திடப்படாத உடன் படிக்கையின் பிரதியை தென் ஆபிரிக்க அதிபர் Ramaphosa உடன் நடைபெற்ற கூட்டத்தில் அவருக்கு காட்டியதாக Independent ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.


விளாடிமிர் புடின் தனது நேர்காணலில் உக்ரைனின் மீது நடத்தும் தாக்குதல் மூலம்தான் அங்கிருந்து நாசிப் படைகளை அகற்றப்போவதாக (de-Nazify) கூறினார். தற்போதைய உக்ரைன் அரசு 'நாசி' ஆதரவாளர் என்று கூறுவதை விளாடிமிர் புடின் உறுதிசெய்ய பின்வரும் சம்பவத்தை விளக்கினார். உக்ரைன் அதிபரின் கனடியப் பயணத்தின் போது, கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருட னும் அவர் எழுந்து நின்று நாசிகளுக்கு ஆதரவாகப் போரிட்ட Yaroslav Hunkaஐ பாராட்டினர். இதை வேறு எவ்வாறு கூறமுடியும் என ரக்கர் கார்ல்சனை விளாடிமிர் புடின் கேட்டார்.

இரண்டாம் உலகப்போரில் சோவியத் யூனியனுக்கு எதிராகப் போராடிய உக்ரேனிய-கனடிய இராணுவ வீரரான Hunka கனடிய நாடாளுமன்றத்தில் உக்ரைன் அதிபரின் கனடிய வருகையின் போது அவருக்கு அறிமுகப்படுத்தப் பட்டார். பின்னர்தான், Hunka நாசிகளின் படைப்பிரிவில் உக்ரைனின் தொண்டராகச் சேர்ந்து போரிட்டவர் எனத் தெரியவந்தது. இதை ரஷ்ய அதிபர் தனது கருத்தான உக்ரைனிய அரசு நாசி ஆதரவாளர் என்று கூறுவதற்கு சான்றாகப் பயன்படுத்தினார்.



Prime Minister Justin Trudeau Thanks: CBC

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவிடம் இதுபற்றி ஊடகவியலாளர் பெப்பரிவரி 9ஆம் திகதி கேள்வி கேட்டனர். கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது பதிலில், "நிச்சயமாக விளாடிமிர் புடின் தனது பிரச்சாரத்திற்கு எவற்றையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அவற்றை எல்லாம் பயன்படுத்துவார். ஆனால், கனடியர்கள் ஏமாற மாட்டார்கள் என என்னால் உங்களுக்கு உறுதியாகக் கூற முடியும்" என்றார்.




- நோயை விட அச்சமே அதிகம் கொல்லும்.
- சில சமயங்களில் இழப்புத்தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
- ஓடுவதில் பயனில்லை. நேரத்திற்கு புறப்படுங்கள்.
- எல்லோரையும் நேசிப்பது சிரமம். ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.
- நல்லவர்களோடு நட்பாயிரு. நீயும் நல்லவனாய்வாய்.
- யார் சொல்வது சரி என்பதல்ல, எது சரி என்பதே முக்கியம்.
- ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.

# ஜே.வி.பியினரின் இந்தியப் பயணம்

- விகிர்தன் -

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) இந்தியாவிற்கு பயணம் செய்துள்ளனர். அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான பிரதிநிதிகளுக்கும், இந்திய அரசின் உயர் மட்டத் தலைவர் களுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடனும் ஜே.வி.பியினர் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இலங்கை மக்களின் நிலைப்பாடுகளை இந்தியா எவ்வாறு புரிந்துக்கொள்கிறது என்பதை இந்தப் பயணம் காட்டுவதாக இந்தியாவின் பிரதான ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. இது இலங்கையின் எதிர்க் கட்சி அரசியல்வாதியுடனான இந்திய அரசின் உயர்மட்ட ஈடுபாட்டை காட்டுவ தாக இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் இலங்கையில் தேர்தல் வருடமாக இருக்கும் நிலையில், உள் நாட்டில் அநுரகுமாரவிற்கு கிடைத்துள்ள உயர்மட்ட அரசியல் செல்வாக்கின் பின்னணியில் அவரது இந்தியப் பயணம் முக்கியமானது என்றும் இந்து பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பியினருக்கு இந்திய அரசாங்கம் உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தமை மகிழ்ச்சிக்குரியது என்றும், இருதரப்பு தொடர்புகள் மற்றும் அதனை மேலும் அதிகரிப்பதன் மூலம் கிடைக்கும் பிரதிபலன்கள் தொடர்பாக சிறந்த பேச்சு வார்த்தை நடைபெற்றதாகவும், இலங்கை யின் பொருளாதார சவால்கள் மற்றும் எதிர்கால பயணம் தொடர்பாகவும் பேசப் பட்டதாகவும் அநுகுமார திஸாநாயக்கவை சந்தித்த பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலுடன் நடைபெற்ற பேச்சு



வார்த்தை தொடர்பில் இந்திய ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர் விஜித ஹேரத், இந்திய மற்றும் இலங்கை சம்பந்தமான பிராந்திய பாதுகாப்பு குறித்தும், இரு தரப்பு சிக்கல்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது ஜே.வி.பி மீது மக்களின் ஆதரவு அதிகரித்து வருகின்ற நிலையில், அக்கட்சி எதிர்காலத்தில் பிரதான எதிர்க்கட்சியாக வரக்கூடிய வாய்ப்பு உள்ளதாக எதிர்வு கூறப்படு கின்றது. இதனை இந்தியாவும் புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகின்றது.

கடந்த காலங்களில் இந்தியாவின் கொள்கைகளுக்கு எதிரான நிலைப் பாட்டிலேயே ஜே.வி.பி இருந்துள்ளது. அதாவது, இந்தியாவின் விஸ்தரிப்பு வாதத்தை ஜே.வி.பி கடுமையாக எதிர்த்து வந்தது. தற்போது அக்கட்சி சர்வதேச, பிராந்திய தரப்புகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கத் தயாராகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே, இந்திய அரசாங்கம் அக்கட்சிக்கு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்தது என்றும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஜே.வி.பியினரின் இந்தியப் பயணத்தை ஆளும் தரப்பினர் சிலர் கேலி செய்து வருகின்றனர். இந்திய விஸ்தரிப்பு பற்றி விரிவுரைகள் நடத்தியவர்கள் இன்று இந்தியத் தலைவர்களை சந்திக்கச் சென்றுள்ளனர் என்றும், பழைய ஆடை



களை அணிந்தவர்கள் இப்போது கோட் சூட் அணிந்துள்ளனர் என்றும், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளு மன்றத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை மூளைச்சலவை செய்தமை தான் இதற்கு காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதானி குழுமத்துடன் வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவதற்காக ஜே.வி.பி தலைவர்கள் அரசாங்கத்தை எவ்வாறு விமர்சித்தனர் என்பதை இப்போது நினைவுபடுத்திப் பார்க்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்னொரு புறம், ஜே.வி.பியினரை இந்தியா அழைத்துப் பேசியமைக்கு வரவேற்பு தெரிவிக்கும் கருத்தும் ஆளும் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியை (ஜே.வி.பி) இந்தியா அழைத்ததை போன்று ஜப்பான், தென்கொரியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளும் அழைப்பு விடுக்க வேண்டும் என ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய எதிர்ப்புக் கொள்கைகளை கடைப் பிடித்த மக்கள் விடுதலை முன்னணியினர் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்ததை தாம் வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, நாடு திரும்பிய ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தங்களது இந்தியப் பயணத்தால் எதிர்க் கட்சிகள் வியப்படைந்துள்ளதாகவும், எதிர் காலத்தில் மேலும் பல ஆச்சரியமான நிகழ்வுகள் வெளிவர உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது இந்திய அரசின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராஜதந்திர பயணமே அன்றி ஜனாதிபதியோ அல்லது வேறு நபர்களின் தலையீட்டில் கிடைத்த சிறப்புரிமையோ அல்ல என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உள்நாட்டில் ஜே.வி.பி இற்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருகின்றதென்பது உண்மை. அதனை இந்தியா கூர்ந்து அவதானித்து வருகின்றமையும் உண்மை.

அதேவேளை, ரணில் விக்ரமசிங்க இந்தியாவுடன் இணைந்து இலங்கையில் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஜே.வி.பி தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு இந்தியா அழைப்பு விடுத்தமைக்கு ஜனாதிபதி ரணிலின் இராஜதந்திரமும் காரணம் என்பதையும் மறுக்க முடியாது.

---

## நானிலம்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளியிடவில்லை. அடக்கிக் கொண்டிருந்தாள். தலைவியின் உள்ளத்திலே இருந்த துயரம் அவள் முகத்தில் ஊர்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட தோழி மிகவும் கவலையடைந்தாள். தலைவி இத்துக்கத்தை இன்னும் எத்தனை நாளைக்குத் தாங்கிக்கொண்டிருக்க வேண்டுமோ? என்று ஏங்கினாள்.

தோழியின் துன்பத்தைக் கண்ட தலைவி, அவளுக்கு ஆறுதல் கூறினாள். “தோழியே நான் வருந்தவில்லை. நான் மிகவும் தைரியமாகத்தான் இருக்கிறேன். தலைவர் விரைவில் திரும்பி வந்து விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த நம்பிக்கையே எனது உள்ளத்தில் ஆறுதல் தென்றலை வீசுகின்றது. தனிமைத் துயரமாகிய வெப்பத்தைத் தணிக்கின்றது. அவர் விரைவில் திரும்புவார் என்பதற்கான காரணத்தையும் கூறுகிறேன் கேள்” என்று மேலும்



சொல்லத் தொடங்கினாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

“தோழி! அல்லிமலரின், வாடிய இதழ் களைப் போன்ற, குவிந்த சிறகுகளை யுடைய, மனைஉறை வீட்டிலே வாழ்கின்ற குருவி, முற்றத்திலே காய்ந்து கொண்டிருக்கின்ற தானியங்களை தின்று, பொதுவிடத்திலே உள்ள எருவின் நுண்மையான பொடிகளை குடைந்து விளையாடி மீண்டும் வீட்டின் இறப்பிலே உள்ள தமது இடத்திலே தம்முடைய குஞ்சுகளோடு தங்கியிருக்கும், பிரிந்த வர்க்குத் துன்பம் தரும் இத்தகைய காட்சியுள்ள மாலைக் காலமும், தனித் துறையும் வருத்தமும், அவர் போயிருக்கும் நாட்டின் கண் இல்லையோ (உண்டு).” தலைவரும் என்னைப்போலவே பிரிவினால் துன்புறுவர் ஆதலால் அவர் விரைந்து வருவார் என்று தோழிக்கு நம்பிக்கையுடன் பதிலளித்தாள்.

நட்பின் பெருமை பற்றிக் குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றை இந்த இதழிலும் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந் தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது. சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

# KOKUVIL HINDU COLLEGE

## OLD STUDENTS' ASSOCIATION CANADA

இரா போசன விருந்துடன்,
மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு

**APRIL 6 2024**

# மகுடம்

# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

## நாமும் நமது இல்லமும் 648

# ஆதன முதலீட்டாளர்களின் வாடகையாளரின் தெரிவுக்கு... Openroom.ca இணையதளம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

இறைவனின் படைப்பில் சகலதும், சகலரும் சமமல்ல. அவர்களின் சிந்தனைக்கு ஏற்ப செயல்பாடுகள் மாறுபடும். இது எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆதனத்தை வாடகைக்குக் கொடுக்கும் உரிமையாளர்களிற்கும் வாடகைக்கு பெறுபவர்களிற்கும், இன்றைய காலத்தில் சிறப்பாக இந்த வார்த்தைப் பிரயோகம் பொருந்தும். நியாயமானவர்கள் அதிகமாகக் காணப் படுவது இயல்பு. ஒரு குறிப்பிட்ட மிகச்சிறிய நியாயமற்ற வாடகையாளர் களும், ஆதன உரிமையாளர்களும் உள்ளனர். சட்டங்களில் இருக்கும் ஓட்டைகளை கண்டறிந்து இரு சார் பாலர்களும் தமக்கு ஏற்ற மாதிரி பாவிப்பதால் தான் சிக்கல்கள், ஆரம்பிக் கின்றன. இதனால் ஒரு சிலர் ஆதாயம் பெறுவார், பலர் பாதிப்படைவர்.

இந்த சந்தர்ப்பங்களில் அரசுகள் தமது இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களிற்கு தள்ளப்படுகின்றன.

இது கனடிய மாகாணங்களிற்கும் பொருந்தும், உள்ளூராட்சி அரசுகளிற்கும் பொருந்தும்.

2017-2018ஆம் ஆண்டுகளில் கனடியர் வாடகைக்குப் பெறுவதில் மிகச் சிரமத்தை அடைந்தனர். இது 2023-2024இலும் தொடர்கின்றது. சில கண்ணியமற்ற (unscrupulous) ஆதன உரிமையாளர் களின் நியாயமற்ற மாதாந்த வாடகை அதிகரிப்பால், அந்த ஆண்டுகளில் பல வாடகையாளர்கள் தமது வாடகை இடத்தை விட்டு வெளியேற வேண்டி யிருந்தது. இதனால் 2017-2018 ஆண்டு களில் பலர், இவ்வாறான நெருக்கடியால் ஒன்ராறியோவை (Ontario) விட்டு வெவ்வேறு மாகாணங்களிற்கு சென்ற கவலையான நிகழ்வுகளையும் காணக் கூடியதாக இருந்தது.

இதனைக் கட்டுப்படுத்த அப்பொழுது ஆட்சியிலிருந்த லிபரல் (Liberal) அரசு வாடகை அதிகரிப்பை மட்டுப்படுத்தியது. அதாவது ஏற்கனவே இருந்த வாடகை கட்டுப்பாட்டு அதிகரிப்பை மட்டுப்படுத்து வதற்காக The Rental Fairness Act, 2017ஐ லிபரல் அரசு நடைமுறைப் படுத்தியது.

ஏப்ரல் 20, 2017இலிருந்து ஆதன உரிமை யாளர்கள் வாடகையை, அரசினால் தெரியப்படுத்தப்படும் வாடகை அளவை விட மேலதிகமாக அதிகரிக்க முடியாது எனக் கொண்டு வந்தது. (2017 இன் அதிகூடிய வாடகை அதிகரிப்பு 1.5%)




வாடகையாளர்களை பாதுகாப்பதற்காக வேறுபல புதிய பிரிவுகளும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதனால், ஆதன உரிமையாளர்கள், ஆதனத்தில் முதலிடுவதனை குறைக்கத் தொடங்கினார்கள். வாடகைக்கு ஆதனம் பெறுவதில் சிறிது சிறிதாக சிக்கல்கள் மேலும் ஏற்படத் தொடங்கியது.

நிலைமை மாறியதனை காணக்கூடியதாக இருந்தது. 2018இல் அரசு மாறியது. பழமைவாதக் கட்சி ஆட்சி அமைத்தது. இந்த அரசு பொதுவாக வசதி படைத்தவர் களிற்கு சார்பானது என்ற எண்ணக் கருத்தை உலகளாவிய மக்கள் கொண்டுள்ளனர்.

புதிய அரசினால் நவம்பர் 15, 2018 இலிருந்து வாடகை அதிகரிப்பிற்கு புதுவடிவம் கொடுக்கப்பட்டது.

நவம்பர் 15, 2018இற்கு பின்பாக குடிபுகும் வீடு மனைகளிற்கு வாடகை அதிகரிப்பிற் குரிய உச்ச வரம்பு முற்றாக நீக்கப்பட்டது.

புதிதாக பல ஆதனங்களை உருவாக்கக் கூடிய முதலீட்டாளர்களை (Investors) ஊக்குவிப்பதற்காகவே இந்த சட்ட மாற்றம் ஏற்படுத்தியதாக பழமைவாதக் கட்சியின் மாகாண முதல்வர் திரு. டக் போட் (Doug Ford) தெரிவித்திருந்தார்.

புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு, ஏற்கனவே இருந்த மனைகள் மற்றும் வீடுகளிற்கு மேலதிகமாக சேர்க்கப்பட்ட பகுதிகளிற்கும் இந்த வாடகை அதிகரிப்பு எல்லை இருக்காது. இதனால், ஆதனத்தில் முதலீடு செய்பவர்கள் நவம்பர் 15, 2018இற்கு பிற்பாடு கிரகப் பிரவேசம் (Occupancy) பெற்ற மனைகள் மற்றும் வீடுகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதனையும் காணலாம்.

இதனால் புதியவிதமான சிக்கல்கள் முதலீட்டாளர்களான ஆதன உரிமை யாளர்களிற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த திகதிக்கு முற்பட்ட வீடு மற்றும் மனையை உரிமை கொண்டவர்களின் அண்மைக்கால வட்டிவீத அதிகரிப்பினால் வாடகை வருமானத்தைவிட மாதாந்த அடமானக் கொடுப்பனவு மிகவும் அதிகமாக காணப்படுகின்றது.

மாதாமாதம் உரிமையாளர்களின் கொடுப்பனவில் பெரிய இழப்பீடு ஏற்படுவதனைக் காணலாம்.

கடந்த சில வருடங்களாக வருடாந்த வாடகை அதிகரிப்பு 2.5%ஆகவே உள்ளது. 2024ஆம் ஆண்டும் 2.5% ஆகவே உள்ளது.

இந்த நிலைமை வாடகைக்கு இருப்போருக்கு சாதகமாக இருப்பதனால், உரிமையாளர்கள் சிரமப்படுவதனைக் காணலாம். அத்துடன் இப்பொழுதுள்ள சட்டங்கள் வாடகையாளருக்கு சிறப்பாக இருப்பதனால், வாடகையாளர்கள் தமக்கு சாதகமாக இதனைப் பாவிக்கின்றார்கள். உதாரணமாக Professional Tenant என அழைக்கப்படும் வாடகையாளர்கள், இவர்களிற்கு சட்டத்திலுள்ள ஓட்டைகள் மற்றும் சட்டத்தை தமக்கு ஏற்ற மாதிரி எவ்வாறு பாவிக்கலாம் என முற்றாக அறிந்துள்ளார்கள். இதனால், ஆதன உரிமையாளர்களிற்கு மிகவும் நஷ்டம் மற்றும் மனக்கஷ்டம் ஏற்படுவதனை காணலாம்.

தமது ஆதனத்தை வாடகைக்கு கொடுக்கும் முன்பு தகுந்த வாடகை யாளர்களை தெரிவு செய்யவேண்டிய கட்டாயத்திற்கு ஆதன உரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு தரமற்ற வாடகையாளரை ஆதனத்திற் குள் குடியேற விட்டால், அவர்களை வெளியேற்றுவது என்பது இலகுவல்ல. பல மாதங்கள்/வருடங்கள் வருமானமற்ற வாடகையாளரை வைத்திருக்க வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். இதனால் சிலர் தமது ஆதனங்களை இழக்க வேண்டியும் உள்ளது.

இவ்வாறான நிலையில் தரமான, நியாய மான, வாடகையாளரை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

அண்மைக்காலமாக "OPEN ROOM" (www.openroom.ca) என்ற இணைய தளத்தில் உரிமையாளர்களும், வாடகை யாளரும் நெருக்கடியில் உள்ளவரின் பெயர்களைக் காணலாம். இதனால் வாடகைக்கு கொடுக்கும்முன்பு, இந்த இணையதளத்திற்கு சென்று குறிப்பிட்ட வாடகையாளரின் பெயர் உள்ளதா என்பதனை தெரிந்துக் கொள்ளலாம். இதன்மூலம் தவறான ஒரு வாடகை யாளரை தவிர்க்கலாம். இன்றைய இறுக்கமான பொருளாதார சூழ்நிலையில் தகுந்தவர்களை தெரிவு செய்வது எதிர் கால நெருக்கடியை தவிர்க்க உதவும்.

## படித்ததில் பிடித்தது



கருணாகரன்

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க் கம். அதை சொர்க்கமாக்குவதும் நரக மாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது.

- பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.


- ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டுபிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.

- ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.

- வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படா விட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக் குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.

- குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.

- அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.



# சொந்த ஊரிலேயே நாடற்றவர்களாக வாழும் 30,000 தமிழக தமிழர்!

## தொ. பத்திநாதன் அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர் கண்ணன்

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழரின் வாழ்வையும், அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் குறித்து தொடர்ந்து எழுதி கவனம் ஈர்த்து வருபவர், தொ. பத்திநாதன். இலங்கை அகதியாக கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வாழ்ந்து வருபவர். நடிகர் விஜய்சேதுபதி நடிப்பில் சமீபத்தில் வெளியாகியுள்ள "யாதும் ஊரே யாவரும் கேளிர்" திரைப்படத்தின் கதை திருட்டு சர்ச்சையில் பேசும்பொருளாக இருந்தவர். தொ. பத்திநாதனை சந்தித்தோம்.

**கேள்வி 1:** முதலில் உங்களைப் பற்றி சொல்லுங்கள்; இலங்கையில் நீங்கள் பிறந்து, வளர்ந்த ஊர் எது? அங்கே இருந்து அகதியாக எப்போது தமிழ்நாடு வந்தீர்கள்?

**பதில்:** நான் இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவன். மன்னார் மாவட்டத்தில் மீன் பிடித்தலும், விவசாயமும்தான் பிரதான தொழில். நாங்கள் விவசாயக் குடும்பம். யாழ்ப் பாணத்தில் படித்துக் கொண்டிருந்தேன். இந்நிலையில் போர் நெருக்கடி காரணமாக 1990இல் என் பதின்நான்கு வயதில் அண்ணன், அக்காக்களோடு அகதியாக தமிழ்நாடு வந்தேன்.

என் வயதில் பெரும்பகுதியை அகதியாகக் கழித்துவிட்டேன். முப்பது ஆண்டுகள் கடந்து விட்டது. இதில் முதல் எட்டு ஆண்டுகள் மதுரை மாவட்டம் உசிலம் பட்டி அகதி முகாமில் இருந்தேன். நெருக்கடியான சூழல், சுதந்திரம் மட்டுப் படுத்தப்பட்ட நிலை என அந்த எட்டு ஆண்டுகளும் என் வாழ்வில் வீணாப் போன நாட்கள்தான். எனவே, அங்கே இருந்து வெளியேறி அகதி என்பதை மறைத்துக்கொண்டு, சட்டவிரோதமாக சென்னையில் பல்வேறு பணிகள் செய்து வாழ்ந்து வந்தேன். அதை எல்லாம் 'போரின் மறுபக்கம்' என்ற என் புத்தகத்தில் பதிவு செய்துள்ளேன்.

**கேள்வி 2:** தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களின் நிலை இப்போது எப்படி இருக்கிறது?

**பதில்:** தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் மொத்தம் 106 அகதி முகாம்கள் உள்ளன. 1983, 1990ஆம் ஆண்டுகளில் இலங்கை யில் ஏற்பட்ட கலவரம், போர் உட்பட பல்வேறு சூழ்நிலைகளில் அங்கே இருந்து 3 இலட்சத்து 80 ஆயிரம் பேர் அகதியாக தமிழ்நாடு வந்துள்ளனர். இங்கிருந்து வெளிநாடு சென்றவர்கள், போர் முடிந்த பின்னர் நாடு திரும்பியவர்கள் போக இப்போது கிட்டத்தட்ட 60 ஆயிரம் பேர் அகதியாக உள்ளோம். இதில் சரி பாதியானவர்கள், அதாவது 30 ஆயிரம் பேர் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

தமிழ்நாட்டின் ஒரு கிராமம் போல்தான் இன்று அகதி முகாம்களும் உள்ளன. கிராமத்தில் என்னென்ன இருக்குமோ அது எல்லாம் அகதி முகாம்களிலும் உள்ளது. அகதி முகாம்களுக்கு வெளியே பக்கத்து



ஊர்களில், தமிழ்நாட்டு தமிழருடன் திருமண உறவு போன்றவையும் இத்தனை ஆண்டுகளில் நடந்துள்ளன. சிலர் படித்து நல்ல வேலைகளுக்கு சென்று 40 - 60 ஆயிரம் மாதச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால், இவையெல்லாம் கொஞ்சப் பேருக்குதான். பெரும்பாலானோருக்கு நெருக்கடியான வாழ்க்கைதான்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் போதெல்லாம், ஆட்சியாளர்கள் நிலைப் பாட்டுக்கு ஏற்ப, அகதி முகாம்கள் உள்ளேயும் மாற்றங்கள் இருக்கும். அதேநேரம் அகதிகள் என்போர் சட்ட விரோத குடியேறிகள் என்று பார்க்கப்படு வதால் பாதுகாப்பு, நலத் திட்டங்களை மட்டும்தான் தமிழ்நாடு அரசால் செய்ய முடியும். அகதிகளின் நீண்ட நாள் கோரிக்கையான குடியுரிமை ஒன்றிய அரசின் கையில்தான் உள்ளது.

**கேள்வி 3:** தமிழ்நாட்டில் இருக்கும் அகதி களில் 30 ஆயிரம் பேர் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்று சொல்கிறீர்கள். அதுவும் அவர்கள் நாடற்றவர்கள் என்னும் நிலையில் இருப்பதாக சொல்கிறீர்கள். எதனால் அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது?

**பதில்:** தமிழ்நாட்டில் இருந்து இலங்கை யில் மலையகத்துக்கு தோட்டத் தொழிலாளர்களாக அழைத்துச் சென்றவர் களின் வழிவந்தோர் அவர்கள். ஆனால், இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு குடியுரிமை வழங்காமலே வருடங்களைக் கடத்தி வந்தது. இந்நிலையில் அவர்களில் பாதி பேரை இலங்கை ஏற்றுக் கொள்வதாகவும் பாதி பேர் இந்தியா திரும்பலாம் என்றும், அவர்கள் விருப்பத்துக்கு மாறாக, இலங்கை - இந்தியா இடையே ஒப்பந்தம் போடப்பட்டது. 1960 முதல் 1984 வரை பதினைந்து ஆண்டுகள் அந்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது. அப்போது ஒப்பந்தப்படி இந்தியா திரும்பிவிட்டவர்கள் இந்திய குடிமக்கள் ஆகிவிட்டனர். இதனிடையே, மலையகத்தில் ஏற்பட்ட கலவரம் காரணமாக மலையகத் தமிழரில் ஒரு பகுதியினர் வன்னி, மன்னார், முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் குடியேறினர். பின்னர் 1983 கலவரம் காரணமாக அங்கே இருந்து அகதியாக இந்தியாவுக்கு வந்தார்கள். ஒப்பந்தப்படி அவர்கள் இந்திய குடியுரிமை பெற்றிருக்க வேண்டியவர்கள். ஆனால், கலவரம் காரணமாக அலைக்கழிக்கப்பட்டதில், அதற்கான கால வரையறையை கடந்து விட்டனர். எனவே, இலங்கை குடியுரிமை யும் இல்லாத நிலையில் அகதியாக முகாம்களில் அடைக்கப்பட்டனர். இலங்கை குடியுரிமை இருப்பதால் நாங்கள் திரும்ப இலங்கை செல்ல முடியும். ஆனால், தமிழ்நாடு அகதி முகாம்களில் இருக்கும் இலங்கை குடியுரிமை இல்லாத மலையகத் தமிழர் இப்போது திரும்ப இலங்கை செல்ல முடியாது. இங்கே இந்திய குடியுரிமையும் இல்லாத நிலையில் நாடற்றவர்களாக அவர்கள் நிலை உள்ளது. எங்களை விட சொந்த நாட்டிலேயே நாடற்றவர்களாக வாழும் அவர்கள் நிலை மிக துயரமானது.

**கேள்வி 4:** "யாதும் ஊரே யாவரும் கேளிர்" திரைப்படத்தில் கதை உங்களு டையது என சொல்லியிருந்தீர்கள். என்ன நடந்தது?

பதில்: "யாதும் ஊரே யாவரும் கேளிர்" திரைப்படம் விஜய் சேதுபதி கதா நாயகனாக நடித்தது. இப்படத்தை வெங்கட் கிருஷ்ண ரோகாந்த் இயக்கி யுள்ளார். ஈழ அகதிகளின் வாழ்வைக் கதைக்களமாகக் கொண்டுள்ள இந்தப் படம் கதையம்சம் சார்ந்தும், காட்சிகள் சார்ந்தும் எனது தன்வரலாற்று நூலான 'போரின் மறுபக்கம்', கட்டுரை நூலான 'தகிப்பின் வாழ்வு', 'அந்தரம்' நாவல், 'நாளையும் நாளையே' சிறுகதை ஆகியவற்றிலிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பல கூறுகளை எடுத்துக்கொண்டுள்ளது.

அகதிகள் குறித்து 2007இல் எனது தன்வரலாற்று நூல் 'போரின் மறுபக்கம்' வெளியானதைத் தொடர்ந்து 'தமிழகத்தின் ஈழ அகதிகள்', 'தகிப்பின் வாழ்வு' ஆகிய இரு கட்டுரைத் தொகுப்புகளும், 'அந்தரம்' நாவலும் எழுதியிருக்கிறேன். இவற்றைக் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டிருக்கி றது. அத்துடன் தொகுப்பாக்கப்படாத பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியிருக்கிறேன்.

'தகிப்பின் வாழ்வு' நூலில் சிம் கார்டு வாங்குவது தொடர்பான உரையாடலில் இருந்து கட்டுரை ஆரம்பமாகும். இந்த உரையாடல் கடையில் இருக்கும் பெண்ணுடன் உரையாடலாக இருக்கும். இது நேரடியாகப் படமாக்கப்பட்டுள்ளது. பெண் கதாபாத்திரத்தை ஆணாக மாற்றியிருக்கிறார்கள்.

2016 'காலச்சுவடு' இதழில் வந்த எனது 'நாளையும் நாளையே' சிறுகதையில் உதவிப்பணம் வழங்கும் அதிகாரி முன் குனிந்து கையெழுத்திடும் பெண்ணின் மார்பகங்களைப் பார்ப்பதால் அந்தப் பெண் அதை சரிசெய்ய முற்படுவாள். இதனால் கடுப்படையும் அதிகாரி அப்பெண்ணைக் கூடுதல் விசாரணைக்கு உட்படுத்துவார். இந்தக் காட்சி படத்தில் காவல் நிலையத்தில் மார்பகங்கள் தெரிய அகதிப் பெண்ணிடம் விசாரணை நடப்பது போல் படமாக்கப்பட்டுள்ளது.

முகாமிலிருந்து எட்டாண்டுகள் பதி வில்லாமல் இருந்துவிட்டு மறுபடியும் முகாமில் பதிவுபெற்றேன். இரண்டு பெயர்களில் தமிழ்நாட்டில் அகதிகள் முகாமிலும் முகாமிற்கு வெளியிலும் வாழ்ந்திருக்கிறேன். ஐந்து நட்சத்திர ஓட்டலில் அகதி என்பதை மறைத்து வேலை செய்தபின் உண்மையை நிர் வாகத்திடம் சொல்லிவிட்டு வேலையில் இருந்து விலகியிருந்தேன். இவை எல்லாம் எனது தன்வரலாற்று நூலான போரின் மறுபக்கத்தில் எழுதப்பட்டுள்ளன. இதை மையமாகக் கொண்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

'அந்தரம்' நாவலில் மகன் காணாமல் போவதால் தவிக்கும் தாயின் கதை இருக்கிறது. படத்தில் காணாமல்போன தம்பியை அக்கா தேடுவதுபோல் கதை உருவாக்கப்பட்டுள்ளது.

நான் மறைந்து வாழாமல் என்னைப் போரின் மறுபக்கத்தின் மூலம் ஏன்

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நானிலம் போற்றும் நட்பு - 39



- அகணி -
authorakani@gmail.com

“கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.” (அதிகாரம் தீ நட்பு, குறள் 819) என்ற குறளிற்கு “செய்யும் செயல் வேறாகவும், சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்கு கனவிலும் துன்பம் தருவதாகும்” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“சொல் வேறு செயல் வேறாக இருப்பவர் நட்பு கனவிலும் துன்பம் தரும்.” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“தம்மால் முடியும் காரியத்தையும், முடியாமல் கெடுப்பவரின் நட்பைச் சொல்லாமலே விட்டுவிட வேண்டும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“சொல் வேறாகவும் செயல் வேறாகவும் நடவடிக்கை உள்ளவர் நட்பு கனவிலும் துன்பம் விளைவிப்பது ஆகும்” என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

மனிதரின் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது பொதுவான விதி. இதனைக் கைக்கொள்ளாதவருடன் நட்புக் கொள்ளுதல் துன்பத்தையே தரும் என்ற கருத்தை இந்தக் குறள் கொண்டுள்ளது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்தொன்றாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாட்டு அணிலாடு முன்றிலார் என்னும் புலவரால் பாடப்பட்டது. இப்பெயரும் காரணப் பெயர் ஆகும். ‘அணிலாடு முன்றில்’ என்னும் தொடர் இவரது செய்யுளில் அமைந்திருந்ததால் அத்தொடரே இவருக்குப் பெயராக வந்துவிட்டது. தலைவன் பிரிந்ததனால் தலைவியின் உடல் வேறுபாட்டைக் கண்டு தோழி வருந்தினாள். அத்தோழிக்குத் தலைவி கூறியதாக அமைந்தது இந்தப் பாட்டு. இது பாலைத்திணையைச் சார்ந்தது.

“காதலர் உழையர்ஆகப் பெரிது உவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில்ஆடு முன்றில்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழிஅவர் அகன்ற ஞான்றே”.

தலைவி தனித்திருக்கின்றாள். தலைவன் பிரிந்து போயிருக்கின்றான். பிரிந்த தலைவனை எண்ணித் தலைவி நெஞ்சம் கலங்கினாள். அதனால் அழகு சிதைந்து வாடினாள். இதைக் கண்ட தோழி கவலைப்பட்டாள். தன் துன்பத்தைக் கண்டு தோழியும் கவலைப்படுகின்றாள் என்பதை உணர்ந்த தலைவி அவளுக்குத் தன் நிலைமையை எடுத்துக் கூறினாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

“தோழி! தோழியே தலைவர் பக்கத்தவராக இருக்கும் போது, மிகவும் மகிழ்ச்சியடைந்து, விழா நடந்து கொண்டிருக்கும் ஊரில் உள்ள மக்கள் மகிழ்வது போல, நிச்சயமாக மகிழ்ச்சியை விரும்பி வாழ்வேன். அவர் என்னை விட்டுப் பிரிந்து போன காலத்தில் பாலைவனத்திலே அமைந்த அழகிய குடிசைகள் அமைந்த சிறிய ஊர்களை விட்டு மக்கள் விட்டுப் போன, அணில் விளையாடிக் கொண்டிருக்கின்ற வாசலையுடைய, தனிமையான வீட்டைப் போல என் அழகிழந்து வருந்துவேன்.” தலைவர் இருந்தால் மகிழ்வேன் பிரிந்தால் வருந்துவேன் என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்திரண்டாவது பாடலைக் கவனிப்போம்.


இது கபிலர் எழுதிய பாட்டு. இரவிலே தலைவியும் தானும் சந்திக்க வேண்டும் என்று விரும்பினான் தலைவன். அவனிடம் நீ இரவிலே சந்திக்காவிட்டாலும் தலைவியின் அன்பு குறையாது என்று தோழி கூறினாள். இதன் மூலம் இரவிலே சந்திக்க இயலாது என்பதைக் குறிப்பாக அறிவித்தாள். இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

“காமம் ஒழிவது ஆயினும், யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடர் அகத்து இயம்பும் நாட! எம்
தொடர்பும் தேயுமோ நின்வயினானே.”

பகலில் மட்டும் இவர்கள் சந்திப்பதனால் அவர்கள் அன்பு முற்றுப் பெறவில்லை. குறிப்பாகக் காதலன், இரவிலும் அவளைச் சந்திக்க விரும்பினான். இரவிலே இவர்கள் சந்திப்பதென்றால் அதற்குத் தோழியின் உதவி வேண்டும். மலர்கள் தனித்தனியே இருப்பதை ஒன்றாக இணைத்து மாலையாக்குவதற்கு உதவி செய்வது நார் அல்லவா? அதுபோல இரு காதலர்களின் வாழ்க்கையை இணைத்து வைப்பதற்குத் தலைவியின் உண்மையான உயிர்த் தோழியின் உதவியில்லாமல் முடியாது.

தலைவன் தன் காதலியின் தோழியை நெருங்கினான். தன் உள்ளத்திலிருந்த ஆசையை ஒளிக்காமல் வெளியிட்டான். தோழியும் அவன் கருத்தை அறிந்தபின் அவனுக்கு விடை கூறினாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.




நள்ளிரவிலே, தொகுதியான பெரிய மழை பெய்வதால், அருவியாக வீழ்கின்ற நீர் மறுநாளும் மலைப் பிளவுகளிலே வீழ்ந்து முழங்கிக் கொண்டிருக்கின்ற மலை நாட்டையுடையவனே. இரவிலே கூடும் காமக் கூட்டம் இல்லையானாலும், உன்னிடத்திலே எம் தொடர்பு எமக்குள்ள அன்பின் பிணைப்பு அறுந்து விடுமோ? அறுந்து விடாது, அழியாது.

தலைவியும் நீயும் இரவில் சந்திக்கா விட்டாலும் அவளுக்கும் உனக்கும். உள்ள அன்பு குறையாது என்று கூறி தனது மறுப்பினைக் கூறுகிறாள் தோழி. இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்துமூன்றாவது பாடலைக் கவனிப்போம்.

இந்தப் பாட்டு ஔவையார் பாடியது. தலைவன் பிரிவால் என் நெஞ்சம் நல்ல பாம்பால் கடிக்கப்பட்டவரைப் போலத் துன்புறுகின்றது என்று தலைவி கூறியது. இது பாலைத்திணை சார்ந்தது.

“செல்வார் அல்லர் என்றுயான், கழ்ந்தனனே ஒல்வாள் அல்லள், என்று அவர், கழ்ந்தனரே
ஆயிடை, இருபேர் ஆண்மை செய்தபூசல்
நல்லராக் கதுவி ஆங்குஎன்
அல்லல் நெஞ்சம் அலமலக்கு உறுமே.”

தலைவன் தலைவி இடையில் இருந்த அன்புக்கு அளவேயில்லை. ஒரு கொத்தில் மலர்ந்த இரு மலர்களைப் போல அவர்கள் வாழ்ந்து வந்தனர். இத்தகைய காதலர்கள் இவ்வுலகில் எவருமேயில்லையெனச் சொல்லும்படி மாடப் புறாக்களாக மகிழ்ந்து இன்புற்றனர்.

தலைவியின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது. “என் காதலன் என்றும் என்னை விட்டுப் பிரிய மாட்டான்” என்ற இறுமாப்புடன் இருந்தாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

“தலைவர் நம்மைப் பிரிந்து போகமாட்டார் என்று நம்பி, நான் அலட்சியமாயிருந்தேன். நம் பிரிவுக்குச் சம்மதிக்கமாட்டாள் என்று துணிந்து, அவர் நம்மிடம் சொல்லாமல் விட்டுச் சென்றார். அக்காலத்தில், இருவரிடமும் உண்டான பெரிய துணிவினால் நேர்ந்த சண்டை, நல்ல பாம்பு கடித்ததைப் போல, என்னுடைய துன்பம் நிறைந்த உள்ளம் நிலைகுலைந்து தடுமாறுகின்றது.”

நானும் அவரைத் தடுக்கவில்லை. அவரும் என்னிடம் சொல்லாமல் போய்விட்டார். அதனால் நான் நெஞ்சம் குழம்புகின்றேன் என்று தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்தது இந்தப்பாடல்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்தாறாவது பாடலைக் கவனிப்போம்.

இது மாமலாடன் என்னும் புலவர் பாடல். தலைவி கூற்றாக அமைந்தது. தலைவன் பிரிவினால் தலைவி வருந்துவாளே என்று தோழி கவலைப்பட்டாள். அப்பொழுது தலைவி “நான் வருந்தவில்லை. தலைவர் விரைவில் திரும்பி விடுவார்” என்று விடையளித்தாள். இழுது மருதத்திணை சார்ந்தது.
“ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீ,
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின் நுண்தாது குடைவன ஆடி,
இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்!
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழி! அவர்சென்ற நாட்டே”

தலைவன் பொருள் தேடப் பிரிந்தான். தலைவி தனித்திருந்தாள். தலைவன் சென்று விட்டானே என்பதனால் அவள் உள்ளத்திலே எழுந்த துக்கத்தை அவள்

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

# பிரபல தமிழ் பெண் எழுத்தாளர் அனுராதா ரமணன்




இதயநோயால் பாதிக்கப்பட்டு தனது 62ஆவது வயதில் இயற்கையைத் தழுவிக்கொண்டவர் அனுராதா ரமணன் என்னும் பெண் எழுத்தாளர். அனுராதா 800க்கு மேற்பட்ட நாவல் இலக்கியங்களையும் 1,230 சிறுகதை இலக்கியங்களையும் கடந்த 30 ஆண்டுகளுக்குமேலாக எழுதிவந்துள்ளார். அனுராதா குடும்ப விடயங்களையும் நாளாந்த வாழ்வியலையும் அடிப்படையாகக் கொண்டு எழுதிவந்த ஒரு எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறை, கூட்டுப்புழுக்கள், மலரின் பயணம், ஒரு வீடு இருவாசல் என்பன தமிழ், கன்னடம், தெலுங்கு மொழிகளில் படங்களாக்கப்பட்டுள்ள கதைகளாகும். இவற்றுள் ‘சிறை’ என்னும் கதை பிரபல நடிகை இலட்சுமியால் நடிக்கப்பட்ட வெற்றிப்படமாகும். கணவனால் கைவிடப்பட்டு அவர் ஓடிச்சென்று தஞ்சமடையும் வீடு ஒரு விபச்சார விடுதி என்பது தெரியாது அங்கு செல்லும் அவர் படும் துன்பங்கள், வேதனைகளைச் சித்தரிக்கும் கதை. “ஒரு வீடு இருவாசல்” பாலச்சந்தரின் ஒரு வெற்றிப்படைப்பு. அப்படத்திற்காக பாலச்சந்தருக்கு தேசிய திரைப்பட விருது விழாவில் முதற் பரிசு கிடைத்த படம் என்பது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவேளை 1978இல் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர் அனுராதா ரமணன். அவர் தெலுங்கு, கன்னடப் படங்களுக்காகவும் விருதுகளைப் பெற்றுக்கொண்டார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் சிறந்த தேசிய சமூகநல எழுத்தாளருக்கான ரஜீவ் காந்தி விருது பெற்ற பெண் எழுத்தாளர் என்பதும் அவரது எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றன.

அவருடைய கதைகளுள் அர்ச்சனைப் பூக்கள், பாசம், புன்னகை, பன்னீர்ப் புஸ்பங்கள், கனாக்கண்டேன் தோழி என்பன சின்னத்திரைப் படங்களாக்கப்பட்டவை.

ஏதோ அறியேன் எனதாருயிரே, வரலாமா உன்னோடு, உன்னைப்போலொருத்தி, ஊமை மனிதர்கள், நெஞ்சுக்குள் நெருஞ்சி முள், நீயும் நானும் நினைத்தால், நாளை வருவான் நாயகன், முத்தமிடநேரமில்லை, முத்தமிட்ட சொப்பனங்கள், முள்ளோடு ஒரு ரோஜா, மன்மத வேஷங்கள், கூட்டுக்குள்ளே சிலகாலம், கொடிப்பூக்கள், கண்ணா உனை மறப்பேனா?, கதவுகள் மறுபடியும் திறக்கலாம், காதல் வாங்கி, காணாமல் போன கனவுகள், அந்தரத்தில் ஒரு ஊஞ்சல் என்பன சிறந்த நவீனங்களாகப் பேசப்பட்டவையாகும்.

மங்கை இதழுக்கான படவரை கலைஞராக ஆரம்பித்த அவரது முயற்சி ஆரம்பத்தில் வெற்றி தரவில்லையாயினும். அவர் தற்செயலாக மங்கை அலுவலகத் தில் விட்டுச் சென்ற நாட்குறிப்பேட்டில்



அவரது பதிவுகளைப் பார்வையுற்ற “மங்கை” இதழின் ஆசிரியர் அவரைக் கதைகளை எழுதும்படி தூண்டியமையால் எழுத்துத்துறையில் 1977இல் பிரவேசித்த அவர் பல்வேறு இதழ்களிலும் எழுதி சிறுகதைக்கான பல்வேறு பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்.

எழுத்துத்துறையில் மட்டுமல்லாது சமூகப் பணியிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பெரும் புகழும் சேர்த்துக் கொண்டார். திருமணமுறிவுக்கு எதிராக அவர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி அவற்றைத் தடுக்கும் முயற்சியில் ஏறத்தாள 30ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வந்துள்ளார். மங்கை இதழில் இவை தொடர்பான கேள்விகளுக்குப் பதிலையும் எழுதி வந்துள்ளார்.

சமுதாய ஊழல்களிலும் அவர் துணிந்து செயற்பட்டு அவற்றிற்கு எதிராக செயற் பட்டுள்ளார். காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் தொடர்பான பாலியல் புகார் குறிந்து அனுராதா வெளியிட்ட கருத்து கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந் தன. இந்துவாக மட்டுமன்றி பிராமணிய குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் காஞ்சி சங்கராச்சாரியாருக்கு எதிராக பாலியல் புகார் செய்திருப்பது பெரும் எதிர்விளைவுகளைத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தின் மென்னையான பக்கங் களையும் பொருளாதார மற்றும் பாலியல் சுரண்டற்பேர்வழிகளுக்கு எதிரான எழுத்துக்கள் அவரது கதைகளிலும் நாவல்களிலும் கட்டுரைகளிலும் கருப் பொருட்களாக அமைந்திருந்தமை அவரது இயல்பை வெளிக்கொண்டு வருவன. திருமணம், திருமண முறிவுகள் குறித்த அவரது விளக்கங்கள், ஆலோசனைகள் சமூகத்தால் பெரிதும் வரவேற்கப்பட்டவையாகும்.

# 800 - திரைவிமர்சனம்




இலங்கைத் தமிழரும் பிரபல துடுப்பாட்ட (cricket) வீரருமான முத்தையா முரளிதரனைப் பற்றிய படம் ‘800’. முதலில் முரளிதரனாக விஜய் சேதுபதி நடிக்க இருந்தார். பின்பு மக்களின் எதிர்ப்பால் அவர் விலகியதால், Madhur Mittal என்ற இந்திப்பட நடிகர் முரளிதரனாக நடித்துள்ளார்.

